بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 21/11/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

# தபூக் போரின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿١﴾ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿٢﴾ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿٣﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿٤﴾

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ﴿٥﴾ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ﴿٦﴾ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ﴿٧﴾

தபூக் போர் பற்றி விவரிக்கப்பட்டு வந்தது. அந்தப் பயணத்தின் கூடுதல் விவரங்களை இன்று நான் விவரிக்கிறேன். இந்த சந்தர்ப்பத்தில், முனாஃபிக்குகள் (நயவஞ்சகர்கள்) நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குத் துன்பம் கொடுக்க முயன்றதைப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு:

தபூக் போரின் பின்னணியில், உண்மையில் யூதர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் முனாஃபிக்குகளின் கூட்டு சதி செயல்பட்டது. மதீனாவிலிருந்து தபூக்கிற்கான பயணம் உண்மையில் மரணப் பள்ளத்தாக்கின் பயணமாக இருந்தது. இந்தப் பயணத்தில், முனாஃபிக்குகள் ஒரு சதி செய்தனர். அதன்படி, திரும்பும் பயணத்தில், ஓரிடத்தில் பாதை இரண்டு பிரிவுகளாகப் பிரிந்தது. ஒன்று பள்ளத்தாக்கின் நீண்ட பாதை, மற்றொன்று குறுகிய மற்றும் கடினமான கணவாய் பாதை. இது சிறியதாகவும் இருந்தது.

முனாஃபிக்குகள் இவ்வாறு திட்டமிட்டனர்: முஸ்லிம்களின் படை கணவாய் வழியாகச் செல்லும்போது, கூட்ட நெரிசலின் போது, இரவில், அனைத்து முனாஃபிக்குகளும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒட்டகத்தைச் சுற்றி கூடி, ஒட்டகத்தை பலவந்தமாக கணவாயின் விளிம்பை நோக்கி ஓட்டிச் செல்வார்கள். மேலும் சேணத்தின் கயிறுகள் வெட்டப்படும். இதனால், ஒட்டகம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பள்ளத்தாக்கில் தள்ளிவிடும். (நவூதுபில்லாஹ்)

அல்லாஹ் தஆலா நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முனாஃபிக்குகளின் இந்தச் சதியைப் பற்றி தெரிவித்து விட்டான். மேலும், நபி (ஸல்) அவர்கள், தம்முடன் மூன்று தோழர்களைத் தவிர வேறு யாரும் கணவாய் வழியாகச் செல்ல வேண்டாம் என்று அறிவிக்கச் செய்தார்கள். இருந்தபோதிலும், முனாஃபிக்குகள் உடனடியாக, பன்னிரண்டு அல்லது பதினைந்து பேர் தங்கள் முகங்களைத் துணிகளால் மூடிக்கொண்டு, வேகமாக கணவாய் நோக்கிச் சென்று, திடீரென ஒட்டகத்தைத் துரத்த ஆரம்பித்து விடலாம். அதைத் திசைதிருப்பி அவர்கள் விரும்பியவாறு கோரவிபத்தில் வெற்றி பெற்றிடலாம் என திட்டம் தீட்டினார்கள். (நவூதுபில்லாஹ்)

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கணவாயில் நடந்து கொண்டிருந்தபோது, திடீரென மக்களின் காலடிச் சத்தத்தைக் கேட்டார்கள். அந்த மக்கள் ஒட்டகத்தின் அருகில் வந்து அதை பயமுறுத்தினர். இதனால் சில சாமான்களும் கீழே விழுந்தன. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹுதைஃபா (ரலி) அவர்களுக்கு அந்த முனாஃபிக்குகளைத் தாக்கி பயமுறுத்துமாறு கட்டளையிட்டார்கள்.

எனவே, ஹஸ்ரத் ஹுதைஃபா (ரலி) அவர்கள் தடியால் முனாஃபிக்குகளின் சவாரி விலங்குகளை அடிக்கத் தொடங்கினார்கள். மேலும், "அல்லாஹ்வின் எதிரிகளே! ஒரு பக்கமாக விலகிச் செல்லுங்கள்" என்று கூறினார்கள். முனாஃபிக்குகள், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சதியைப் பற்றி அறிந்துக் கொண்டார்கள் என்பதைப் புரிந்துகொண்டு, உடனடியாக ஒரு பக்கமாக ஒதுங்கினார்கள். திரும்பிவந்து படையுடன் கலந்தார்கள்.

ஓர் அறிவிப்பின்படி, அல்லாஹ் தஆலா இந்த முனாஃபிக்குகளின் பெயர்களைப் பற்றி அன்னாருக்கு அறிவித்திருந்தான். அதன்படி, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஹுதைஃபா (ரலி) அவர்களிடம், "நான் உங்களிடம் ஓர் இரகசியத்தைப் கூறப் போகிறேன்" என்று கூறினார்கள். பின்னர், அன்னார், "தாக்குதல் நடத்தியவர்களின் பெயர்களை அல்லாஹ் எனக்குத் தெரிவித்துள்ளான். மேலும் நான் அவர்களுக்கு ஜனாஸா தொழுகை நடத்தக்கூடாது என்று எனக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது" என்று கூறினார்கள்.

மக்கா வெற்றிக்குப் பிறகு, முனாஃபிக்குகளின் சதித் திட்டங்கள் அதிகரித்தன. யூத கோத்திரங்கள் தங்கள் பலத்தை இழந்துவிட்டதைக் அவர்கள் கண்டபோது, அரபுலகிற்கு வெளியே உள்ள ரோமானிய பேரரசு போன்ற சக்திகளிடமிருந்து உதவி கேட்கும் திட்டத்தைத் தீட்டினர். அதோடு, மதீனாவிலும் ஒரு நிரந்தர மையத்தை உருவாக்கத் திட்டமிட்டனர்.

முனாஃபிக்குகளின் திட்டம் என்னவென்றால், முஸ்லிம்களுக்கு எதிராகச் சதித் திட்டங்கள் தீட்டப்படும் ஒரு தலைமையகம் இருக்க வேண்டும்; அங்கு ஆயுதங்களும் சேகரித்து வைக்கப்பட வேண்டும்; ஆனால், வெளிப்படையாகப் பார்க்கும்போது, அந்த மையம் மற்ற முஸ்லிம்களுக்கு எந்தச் சந்தேகத்தையும் ஏற்படுத்தாதவாறு இருக்க வேண்டும்.

ஒரு சில காலத்திற்குப் பார்வைக்கு வராமல் இருந்த அபூ ஆமிர் திடீரெனத் தோன்றினான். மேலும் பரப்புரையாளர்கள் அவனை அபூ ஆமிர் ராஹிப் என்று அழைக்கத் தொடங்கினார்கள். அபூ ஆமிர் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்தவனாவான். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனா வந்த பிறகு, இவன் மக்காவுக்குச் சென்று விட்டான். மேலும் குரைஷிகளை அன்னார் (ஸல்) உடன் போரிடத் தூண்டினான். இவனைப் பற்றி, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "இவன் தன் நாட்டிலிருந்து வெகு தொலைவில் தனிமையில் மரணமடையட்டும்" என்று துஆ செய்திருந்தார்கள்.

அபூ ஆமிர்தான் முனாஃபிக்குகளுக்குப் பின்வரும் ஆலோசனையை வழங்கியிருந்தான்: "நீங்கள் குபாவில் ஒரு மஸ்ஜிதைக் கட்டுங்கள். மேலும் அதை உங்கள் இராணுவத் தளமாக ஆக்கி, போருக்குத் தயாராகுங்கள்". அபூ ஆமிர் ரோமானியப் பேரரசை நோக்கிச் சென்றுவிட்டான். மேலும் சிரியாவில் ரோமானியப் பேரரசர் கைஸரை முஸ்லிம்களுக்கு எதிராகத் தூண்டிவிட்டுக் கொண்டிருந்தான். அவரை முஸ்லிம்களுக்கு எதிராகப் போரிடத் தூண்டினான்.

அவன் கைஸரிடம், "முஸ்லிம்கள் சிறிய எண்ணிக்கையில் உள்ளனர். பலவீனமானவர்கள், ஏழைகள் ஆவர். அவர்களுக்கு எதிரிகள் அதிகம். நீங்கள் அவர்களுக்குப் பயப்படத் தேவையில்லை. ஆனால், நீங்கள் இவர்களுக்கு எதிராக இப்போதே நடவடிக்கை எடுக்காவிட்டால், எதிர்காலத்தில் அது உங்கள் பேரரசுக்கு நல்லதல்ல" என்று கூறினான்.

ஹெர்குலஸ் அவனைத் தன்னுடன் தங்க வைத்து, ஆறுதல் அளித்தார். மேலும் அவனுக்கு உதவ உறுதியளித்தார். இதற்கிடையில், அபூ ஆமிர் தன் சகாக்களான சதிகாரர்களிடம், "விரைவில் ஒரு பெரிய படையுடன் மதீனாவின் மீது படையெடுப்பேன். எனவே! எனக்காக ஒரு வலிமையான மறைவிடத்தைக் கட்டுங்கள்" என நற்செய்தியைத் தெரிவித்தான். இதனால்தான் முனாஃபிக்குகள் குபாவில் ஒரு மஸ்ஜிதைக் கட்டினர். இந்த மஸ்ஜித் மஸ்ஜிதே ளிரார் என்று அழைக்கப்படுகிறது. அபூ ஆமிரின் இந்த ஆசையும் நிறைவேறவில்லை. இறுதியில் அவன் சிரியாவிலேயே தனிமையிலும், தாயகம் இழந்த நிலையிலும் ஹிஜ்ரி 9 அல்லது 10 இல் இறந்து போனான்.

மஸ்ஜித் கட்டுமானத்தை முனாஃபிக்குகள் முடித்தபோது, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, அவர்களின் மஸ்ஜிதில் தொழுகை நடத்துமாறு கோரினர். அல்லாஹ்வின் நுட்பமான செயல் என்னவென்றால், அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தபோது, அன்னார் தபூக்கிற்குப் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். அன்னார் (ஸல்), "இப்போது நான் பிஸியாக இருக்கிறேன், பயணத்திற்குத் தயாராகிறேன். நாம் பயணத்திலிருந்து திரும்பியவுடன், இந்த மஸ்ஜிதில் தொழுவோம்" என்று கூறினார்கள். தபூக் போரில் இருந்து திரும்பிய பிறகு, அல்லாஹ் தஆலா வஹீ மூலம் அன்னாருக்கு இந்த மஸ்ஜித் பற்றி இப்படி முன்னெச்சரிக்கை செய்தான்:

"மேலும், தீங்கிழைக்கவும், இறைமறுப்பைப் பரப்பவும், முஃமின்களிடையே பிளவை ஏற்படுத்தவும், அல்லாஹ்வுடனும் அவனது தூதருடனும் ஏற்கனவே சண்டையிட்டுக் கொண்டிருக்கும் ஒருவனுக்குப் பதுங்குமிடத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவும் ஒரு மஸ்ஜிதைக் கட்டியவர்கள், "நாங்கள் நன்மையைத் தவிர வேறு எதுவும் நாடவில்லை" என்று நிச்சயமாக சத்தியம் செய்வார்கள். ஆனால் அவர்கள் நிச்சயமாகப் பொய்யர்கள் என்று அல்லாஹ் சாட்சியமளிக்கிறான்."

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த வஹீக்குப் பிறகு, மஸ்ஜிதே ளிராரை இடிக்க உத்தரவிட்டார்கள். எனவே, அன்னாரின் கட்டளைப்படி அந்த மஸ்ஜித் தீ வைத்து எரிக்கப்பட்டது. நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வருகை தந்தபோது, இந்த இடத்தை ஆஸிம் இப்னு அதீக்கு அவர் அங்கே தன் வீட்டைக் கட்டிக் கொள்ள அளிக்க

விரும்பினார்கள். ஆனால் ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்கள் மன்னித்தருளுமாறு கோரி, இந்த இடத்தை ஸாபித் இப்னு அர்கமுக்குக் வழங்கலாம் என்று ஆலோசனை வழங்கினார்கள். ஏனெனில் அவருக்குத் தங்குவதற்கு இடம் இருக்கவில்லை. எனவே, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த இடத்தை ஸாபித் இப்னு அர்கமுக்கு வழங்கி விட்டார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: "முனாஃபிக்குகளின் இவ்வளவு பெரிய சதி இருந்தபோதிலும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உடல் ரீதியான அல்லது நிதி ரீதியான எந்தத் தண்டனையையும் வழங்கவில்லை".

கிட்டத்தட்ட இரண்டு மாதப் பயணத்திற்குப் பிறகு, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார்கள். மதீனாவின் குடியேற்றப் பகுதி அன்னாரின் கண்களில் பட்டபோது, அன்னார், "இந்த (உஹுத்) மலை நம்மை நேசிக்கிறது, நாம் அதை நேசிக்கிறோம்" என்று கூறினார்கள். அதாவது, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவின் ஒவ்வொரு இடத்தையும் நேசித்தார்கள். அன்னார் "நான் மதீனாவை விரைவில் அடைய வேண்டும், என்னுடன் வர விரும்புபவர்கள் வரலாம்" என்று கூறினார்கள்.

தபூக் போரிலிருந்து திரும்பும்போது, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், " மதீனாவில் சில மக்கள் இருக்கிறார்கள், நீங்கள் எந்தப் பள்ளத்தாக்கைக் கடந்தபோதும் அல்லது எந்தப் பயணம் செய்தபோதும், அவர்கள் உங்களுடன் இருந்தார்கள்" என்று கூறினார்கள். “அவர்கள் மதீனாவில் இருந்தபோது எங்களுடன் எப்படி இருக்க முடியும், அல்லாஹ்வின் தூதர் அவர்களே? {(ஸல்)}" என்று சஹாபிகள் கேட்டார்கள். அதற்கு அன்னார், "அவர்கள் மதீனாவில் தான் இருக்கிறார்கள். மேலும் நோய் போன்ற ஏதோ காரணம் அவர்களைத் தடுத்துவிட்டது" என்று கூறினார்கள்.

மற்றோர் அறிவிப்பில் உள்ளது: அன்னார் திரும்பியபோது, அல்லாஹ் தஆலாவுக்கு நன்றி தெரிவித்தவாறு, "எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன் தான் எங்களது இந்த பயணத்தில் எங்களுக்கு வெகுமதியையும் நன்மைகளையும் கூலியையும் அளித்தான். மேலும் எங்களுக்குப் பின்னால் தங்கியிருந்தவர்களையும் இந்த நன்மையிலும் கூலியிலும் எங்களுடன் சேர்த்தான்" என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், "தாங்கள் தான் பயணத்தின் சிரமங்களைத் தாங்கினீர்கள். பின்னர் தான் இந்த நன்மை மற்றும் கூலியைப் பெறத் தகுதியானீர்கள். அவர்கள் கஷ்டங்களைத் தாங்காமல் எப்படி நன்மையில் பங்கெடுத்தார்கள்?" என்று கேட்டார்கள். நபியவர்கள், "நோய் எவர்களைத் தடுத்து வைத்ததோ அவர்கள் எங்களுடன் இருந்தவர்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர்களின் துஆ எதிரிக்கு எதிராக எங்கள் ஆயுதங்களை விட அதிகம் செயலாற்றியது" என்று கூறினார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருகை தந்த போது, மதீனாவாசிகள் நகரத்திற்கு வெளியே வந்து, பாடல்களையும் கவிதைகளையும் பாடி பாடி அன்னாரை வரவேற்றார்கள்.

*முடிவில், ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள்:* இன்னும் சில சம்பவங்கள் மற்றும் நபியவர்களின் வரலாற்றின் அம்சங்கள் உள்ளன, அவற்றை நான் இன்ஷா அல்லாஹ் அடுத்த முறை விவரிப்பேன் *என்று கூறினார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰہِ ! اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ
سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ أَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ
وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ
یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)